ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2450/02 - 2025 අගෝස්තු මස 18 වැනි සඳුදා - 2025.08.18

2450/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/AC/8/5/14.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2018/HW/410.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 581/ஏ, எரெவ்வல மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள எரெவ்வல (கெஸ்பேவ நகர சபை எல்லைக்குட்பட்ட) கிராமத்தில் அமைந்துள்ள கொழும்பு மாவட்ட நில அளவையாளர் அதிபதி சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் 2022.08.12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ. 9989 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0041 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டுகள் (03) விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 1**
காணியின் பெயர்: வரி மதிப்பீட்டு இல. 1796, மஹரகமை வீதி; விபரம்: திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. டீ. லக்ஸ்மன் பெரேரா, இல. 672/B5, எரெவ்வல, பன்னிப்பிட்டி (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை; விஸ்தீரணம்: 0.0010 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 2**
காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியாது, மஹரகமை வீதி; விபரம்: திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோரு பவர்: (பிலியந்தலை - மஹரகமை வீதி நிர்மாணிப் பதற்கு அவசியமாக உள்ளது) நடவடிக்கை; விஸ்தீரணம்: 0.0024 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 3**
காணியின் பெயர்: வரி மதிப்பீட்டு இல. 1689, மஹரகமை வீதி; விபரம்: திறந்த பயனற்ற நிலம்;

உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ. ஏ. ஜே. அமரசிங்ஹ, இல. 584/3C, எரெவ்வல, பன்னிப்பிட்டி (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை; விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஷங்கா டீ. கே. உடவத்தை,
பிரதேச செயலாளர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2025, ஓகத்து 07.

EOG 08 - 0194

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.